செ.வெ.எண்: 27 நாள்: 14.07.2016

# பத்திரிகை செய்தி

## இளங்கலை பட்டப்படிப்பு பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு வருமான உச்ச வரம்பின்றி இலவசக் கல்வி உதவித்தொகை

அரசு,அரசுஉதவிபெறும் கல்வி நிறுவனங்கள் மற்றும் தனியார் தொழிற் கல்லூரிகளில் (அரசு ஒதுக்கீட்டின் கீழ்) பயிலும் பிற்படுத்தப்பட்ட,மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் மாணவ/ மாணவியருக்கு தமிழக அரசு கல்வி உதவித்தொகை வழங்கிவருகிறது.

அரசு மற்றும் அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் இளங்கலை பட்டப்படிப்பு பயிலும் மாணவ/மாணவியருக்கு எவ்வித நிபந்தனையுமின்றி இலவசக் கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ் கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது.

### பட்டமேற்படிப்பு

முதுகலைபட்டப்படிப்பு (எம்.பில், பி.எச்.டி. உட்பட) பயிலும் மாணவ/ மாணவியருக்கு அவர்கள் பெற்றோர் அல்லது பாதுகாவலர் ஆண்டு வருமானம் ரூ. 2 இலட்சத்திற்கு மிகாமல் இருக்கும்பட்சத்தில் கற்பிப்புக் கட்டணம், சிறப்புக் கட்டணம், தேர்வுக் கட்டணம், புத்தகக் கட்டணம் ஆகியவை பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ் வழங்கப்படும்.

### பாலிடெக்னிக்

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பாலிடெக்னிக் 3 ஆண்டு தொழிற்படிப்பு பயில்பவர்களின் பெற்றோர்/பாதுகாவலரது ஆண்டு வருமானம் ரூ. 2,00,000/- க்கு மிகாமலும் குடும்பத்தில் எவரும் பட்டதாரியாகவோ அல்லது பாலிடெக்னிக் பயிலாதவராக இருக்கும் பட்சத்தில் இலவச கல்வித்திட்டத்தின் கீழ் கற்பிப்புக் கட்டணம், சிறப்புக் கட்டணம், தேர்வுக் கட்டணம்,திரும்பபெற இயலாத கட்டாயக் கட்டணங்கள் ஆகியவை வழங்கப்படும். புத்தகக் கட்டணம் கல்வி உதவித்தொகை அறிவிக்கையின்படி வழங்கப்படும்.

### தொழிற்கல்வி

அரசு மற்றும் அரசு உதவி பெறும் மற்றும் சுயநிதி உதவிக் கல்வி நிலையங்களில் அரசு ஒதுக்கீட்டின் கீழ் (ஒற்றைசாளர முறையில் தேர்ந்தெடுத்தவர்கள் மட்டும்) பயிலும் மாணவ/மாணவியர்கள் குடும்பத்தில் எவரும் பட்டதாரியாக இருத்தல் கூடாது. பெற்றோர் அல்லது பாதுகாவலர் ஆண்டு வருமானம் ரூ. 2 இலட்சத்திற்கு மிகாமல் இருத்தல் வேண்டும். இத்திட்டத்தின் கீழ் கற்பிப்புக் கட்டணம், சிறப்புக் கட்டணம், தேர்வுக் கட்டணம், திரும்பபெற இயலாத கட்டாயக் கட்டணங்கள் ஆகியவை வழங்கப்படும். புத்தகக் கட்டணம் கல்வி உதவித்தொகை அறிவிக்கையின்படி வழங்கப்படும்.

### உண்டிமற்றும் உறைவிடம்

விடுதியில் தங்கிபயிலும் மாணவ/மாணவியருக்கு அவரது பெற்றோர் அல்லது பாதுகாவலர் ஆண்டு வருமானம் ரூ. 2 இலட்சத்திற்கு மிகாமல் இருக்கும் பட்சத்தில் உணவு மற்றும் தங்கும் இடவசதிக்கான செலவினம் தொழிற்கல்வி பயில்வோருக்கு பிரதிமாதம் ரூ. 350/- வீதமும், பாலிடெக்னிக் மற்றும் முதுகலைக் கல்விபயில்வோருக்கு பிரதிமாதம் ரூ. 225/- வீதமும் பட்டப்படிப்பு பயில்பவர்க்குரூ. 175/- வீதமும் வழங்கப்படும்.

## விண்ணப்பப் படிவங்கள்

கல்வி உதவித்தொகைக்கான விண்ணப்பபடிவங்களை மாணவர்கள் பயிலும் கல்வி நிறுவனங்களிலேயே பெற்று கொள்ளலாம். பூர்த்திசெய்த விண்ணப்பப் படிவங்களை உரியசான்றுகளுடன் கல்வி நிலையங்களில் சமர்பிக்க வேண்டும். மாணவ/ மாணவியர்களுக்கு கல்வி உதவித்தொகை மின்னணுபரி மாற்றத்தின் மூலம் வழங்கப்படவுள்ளதால் மாணவ/ மாணவியர்கள் தங்களின் வங்கி கணக்கு எண்ணுடன்,வங்கியின் IFSC Code, MICR Code,ஆதார்எண் விவரத்தையும் விண்ணப்பத்தில் தவறாது குறிப்பிடவேண்டும்.

மாணவ/ மாணவிகள் சாதி மற்றும் வருமானச் சான்றிதழ் ஆன்லைன் மூலம் பெறும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளதால் அச்சான்றுகளின் நகலை இணைத்தால் போதுமானது. இதற்கென கல்வி உதவித்தொகை விண்ணப்பப் படிவத்திலும் சான்றொப்பம் பெறவேண்டிய அவசியமில்லை. ஒற்றைச் சாளர முறையில் ஒதுக்கீடு பெற்றுபயிலும் மாணவ/மாணவிகள் அதற்கானஆணையின் நகலை விண்ணப்பப் படிவத்தில் கட்டாயம் இணைத்திருக்க வேண்டும்.

## விண்ணப்பிக்கவேண்டிய இறுதிநாள்

நடப்பாண்டில் கல்வி உதவித்தொகை புதுப்பித்தல் (Renewal) 31.07.16-க்குள் விண்ணப்பிக்க வேண்டும். புதியது (Fresh) விண்ணப்பிக்க கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயில்பவர்கள் 17.08.16-க்குள்ளும், இதர கல்லூரிகளில் பயில்பவர்கள் 30.08.16-க்குள்ளும் விண்ணப்பிக்க வேண்டும். இவ்விண்ணப்பங்களை கல்வி நிலையங்கள் பரிசீலித்து தகுதிகளின் அடிப்படையில் கேட்புகளை இணையதளத்தில் பதிவு செய்தல் வேண்டும். மேலும் விவரங்களுக்கு மாவட்டஆட்சியர் அலுவலகம், முதல் தளத்தில் இயங்கி வரும் மாவட்டபிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தை அணுகி மேற்படி கல்வி உதவித்தொகை திட்டங்கள் குறித்த விபரங்களை பெற்று உரிய காலத்தில் விண்ணப்பித்து மாணவ/ மாணவியர்கள் பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**